முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 18 ம் திகதி முதல்

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 25 ம் திகதி வரை

(01.05.2022 ஞாயிறு முதல் 08.05.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞான ஆட்சி படைக்க வேண்டி
   ஞான பண்டிதன் அம்சமாக
   ஞான தேசிகனாக வந்த குருவே
   ஞாலமதில் இந்தியா தமிழகத்தில்
2. தமிழகத்தில் சுபகிருது தகர் திங்கள்
   தக்க மூவாறுதிகதி மேல் இருபானை திகதி வரை
   நேமமுடன் நடக்கும் நிகழ்வாக
   நிலமதனின் வருங்கால பலனாக நீகேட்க
3. கேட்கவே அகத்திய மகரிஷியும்
   கூறிடுவேன் வார ஆசிதன்னை
   கட்டமான வெப்பநிலை கூடி
   காணவரும் மக்களுக்கு பிணிசோடை
4. சோடையுற எரிபொருள் கச்சா எண்ணெய்
   சொல்லவியலா விலை ஏற்றமாகி
   இடர்தரும் மக்களும் வருந்த
   ஏற்றமதை கட்டுப்படுத்த வகை தெரியா
5. வகை தெரியா இந்திய தமிழக ஆளுமை
   வரிச்சுமையோடு தொடர நேரும்
   பகை உணர்வில் கீழ்மேல் ஆளுமை
   பாதகநிலை வளர்ச்சியிலா காண நேரும்
6. நேருமை கொண்டு தருமமுடன்
   நீதி நெறி மீறா ஆளுமையாக
   வருமுலகில் சுய விருப்ப வெறுப்பு இன்றி
   வள்ளல்தன்மைபட ஆளுமை
7. ஆளுமை ஞானிகளை வணங்கி
   ஆற்றல்பட தொடர்ந்தால்தான்
   ஆளுமை சிறந்து வளர்ச்சி
   அனைத்துத் துறைகளிலும் காண்கும்
8. காண்கவே சைவ நெறி முறை
   கண்ணியமுற எங்கும் தழைக்கும்
   ஆன்மீக பலமுள்ள வண்ணம்
   ஆளுமைகள் நாட்டம் கூட்டிவர

9. வருகவே தமிழகம் இந்தியாவின்
வளர்ச்சிப் பாதைகள் தடைபடா
வருவாய் பெருக்கம் கூடியே
வல்லரசு நாடுகளே வியக்க

10. வியக்க நல்ல முன்னேற்றமும்
விரைந்து பொருளாதாரபலமும்
தயக்கமிலா கண்டு தலைநிமிரும்
தரணிக்கே வழிகாட்டலாக அமையும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 18 ம் நாள் **01.05.2022** ஞாயிற்றுக்கிழமை சித்திரை மாதம் **25** ம் நாள் **08.05.2022** ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகள் :

இவ்வுலகினில் ஞானிகள் தலைமையேற்கும் ஞான ஆட்சியினை உருவாக்கிடவே ஞானப்பண்டிதன் முருகப்பெருமானின் அம்சமாக ஞானதேசிகராக இவ்வுலகினில் அவதரித்திட்ட ஞான குருவே ஆறுமுக அரங்கமகா தேசிகரே இந்தியா தமிழகத்திலே சுபகிருது வருடம் சித்திரை மாதம் 18ம் நாள் 01.05.2022 ஞாயிற்றுக்கிழமை முதல்சித்திரை 25ம் நாள் 08.05.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்க விருக்கும் நிகழ்வுகளை அரங்கமகானே தாம் அகத்தியர் எம்மிடம் கேட்க வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இனிவரும் வாரத்தில் சூரிய வெப்பம் அதிகரித்து வெப்ப சம்பந்தமான நோய் குற்றங்கள் நாட்டு மக்களுக்கு உண்டாகும் நாட்டிற்கு தேவையான கச்சா எண்ணையும் எரிபொருள்களும் சொல்ல முடியாத வகையிலே விலை ஏற்றம் காணும் இதனால் மக்கள் படுகின்ற துன்பங்களை துடைக்க அரசுகளால் விலையேற்றத்தை கட்டுப்படுத்த முடியாத வகையிலே போய்விடும்.

அதுமட்டுமல்லாமல் எரிபொருள் கச்சா எண்ணெய் மீது வரிவிதிப்பும் அதிகமாகக் கூடும். இதனால் நாட்டில் தொழில் வளர்ச்சி பாதிக்கும். விலை வாசி உயர்வால் மத்திய மாநில அரசுகளிடையே பினக்கம் வரலாம்.

தருமத்தின் நெறிமுறைகளை நீதிநெறி மீறாது சுயவிருப்பு வெறுப்பு இல்லாமல் வள்ளல் தன்னையுடன் நடந்து கடவுள் நம்பிக்கை கொண்டு ஞானிகளை வணங்கி ஆற்றல் பெற்று ஆட்சி நடத்தினால் ஆட்சி சிறப்பான ஆட்சியாக அமைந்து நாட்டின் அனைத்து துறைகளும் வளர்ச்சிஅடையும் உயிர் கொலை நீக்கி புலால் மறுக்கும் சைவ உணவு முறை நாடெங்கும் அதிகமாகிடும்.

ஆன்மீக நாட்டம் கொண்டு ஆன்மீக பலம் பெற்று ஆளுமைகள் செயல் பட்டால் தமிழகம் இந்தியாவின் வளர்ச்சி பாதைகள் அனைத்தும் எவ்வித தடையும் இன்றி வளர்ச்சி அடைந்து வருவாய் பெருகிடும். உலகின் வல்லரசு நாடுகளே வியக்கும் படியாக நாடு விரைந்து முன்னேறும் நாட்டின் பொருளாதார பலம் பெருகி நாடு தலைநிமிர்ந்து உலக அரங்கில் நடைபோடும் நாட்டின் ஆட்சி முறைமை உலகிற்கே வழிகாட்டலாக அமைந்திடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி

–சுபம்–